திருவேற்காடு நகராட்சி

சாதாரணக் கூட்டம்

திருவேற்காடு நகராட்சியில் 2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05ம் நாள் புதன்க்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி மன்ற கூடத்தில் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட தீர்மான நகல்.

**பொருள் எண்.1**

இந்நகராட்சியின் ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் அக்டோபர் 2025 மாதத்திற்கான மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :–

மன்றத்தில் பதிவு செய்யலாம்.

---

**பொருள் எண்.2**

இந்நகராட்சியின் பல்வேறு இனங்களின் அக்டோபர் 2025 மாதத்திற்கான செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :–

மன்றத்தில் பதிவு செய்யலாம்.

---

**பொருள் எண்.3**

இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிகழும் பிறப்பு , இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகளின் விபரங்கள் கணினியில் பதியப்படுகிறது. அக்டோபர் 2025 மாதத்திற்கான பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்த குழந்தைகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அக்டோபர் 2025 | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| | 63 | 69 | 132 | 31 | 17 | 48 | 0 | 0 | 0 |
| மொத்தம் | 63 | 69 | 132 | 31 | 17 | 48 | 0 | 0 | 0 |

**அலுவலக குறிப்பு** :– மன்றத்தில் பதிவு செய்யலாம்.

---

**பொருள் எண்.4**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பசுமை உரக்குடில் (Micro Compost Centre) கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில் மேற்படி பசுமை உரக்குடில்களுக்கு வரப்படும் மக்கும் குப்பைகளை எடை இயந்திரம் அளவீடு செய்யப்பட்டு வருவதால், மேற்படி எடை இயந்திரம் பழுது ஏற்பட்டு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், மேற்படி எடை இயந்திரத்திம் 7 எண்ணிக்கை புதியதாக கொள்முதல் செய்து கொள்ள ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கி கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.924, நாள்.30.04.2025 அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, மேற்படி இயந்திரம் கொள்முதல் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதை தொடர்ந்து, கீழ்க்கண்டவாறு பெறப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. | பணியின் விபரம் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | விலை |
|---|---|---|---|---|

| எண் | | தொகை (ரூ.இலட் சத்தில் | | விகிதம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பசுமை உரக்குடில்களுக்கு தேவையான எடை இயந்திரம் 7 எண்ணிக்கை சப்ளை செய்யும் பணி மேற்கொள்ளுதல். | 2.10 | **திரு.M.இரவிச்சந்திரன்,** எண்.2/7, குளக்கரை தெரு, சிக்கராயபுரம், சென்னை – 69. | 24599/– (Each) |
| 2. | | | **திரு.S.G.நாராயணன்,** எண்.104, பள்ளிக்கூட தெரு, சிக்கராயபுரம், சென்னை –69. | 25500/– (Each) |
| 3. | | | **திரு.G.விஜயகுமார்,** எண்.1/6, மாருதி நகர், வெங்கடாபுரம், அம்பத்தூர், சென்னை –53. | 26700/– (Each) |

**அலுவலக குறிப்பு :–**

அ) மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.M.இரவிச்சந்திரன் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை தொடர்ந்தமைக்கும், செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீரிக்கலாம்.

இ) மேற்படி பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

**பொருள் எண்.5**

திருவேற்காடு நகராட்சியில் பொது நிதி 2025–2026–ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 15.07.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண். | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில் ) | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 5 | செட்டி 1வது குறுக்கு தெரு, ராஜீவ் நகர் 4வது தெரு மற்றும் ராஜீவ் நகர் 5வது தெருக்களுக்கு சிமெண்ட் தளம் அமைத்தல், | 14.60 | 1. M/s.MS Enterprises (L1)<br>2. Thiru.G.Vijaya kumar (L2) | 1.80 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.63 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | 1 | அரவிந்த நகர் 1வது, 2வது மற்றும் 3வது தெருக்களுக்கு தார்தளம் அமைத்தல், | 14.30 | 1. Thiru.P.Chandran (L1)<br>2. M/s.V.K Construction (L2) | 0.87 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.05 % மதிப்பீட்டை விட அதிகம் |

| வ. எ ண். | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில் ) | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 3. | 2 | ஹரிஹரன் தெருவிற்கு தார்தளம் அமைத்தல். | 19.50 | 1. Thiru.P.Chandran (L1)<br>2. M/s.V.K Construction (L2) | 1.46 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.09 % மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதன் எதிரோ குறிப்பிட்டுள்ளபடி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள L1 ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

---

<u>பொருள் எண்.6</u>

திருவேற்காடு நகராட்சியில் பொது நிதி 2025-2026-ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 18.08.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் உள்ள நீர்முழ்கி மின்மோட்டார்களின் பம்புகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்தல் மற்றும் உதிரி பொருட்களை புதியதாக மாற்றியமைத்தல். | 7.30 | 1. G.விஜயகுமார் (L1)<br>2. M/s.JBS Infra Inc., (L2) | 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.44 % மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதன் எதிரோ குறிப்பிட்டுள்ளபடி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள L1 ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

---

<u>பொருள் எண்.7</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16 மற்றும் 18 இணைக்கும் வகையில் உள்ள நூம்பல் பிரதான சாலையில் 31.08.2025 அன்று பெய்த கனமழையின் போது அச்சாலையில் அதிக அளவு மழைநீர் தேங்கியதால், மழைநீர் வடிகால்வாயின் வழியே மழைநீர் வெளியேற வழிவகை இல்லாமல் அப்பகுதியில் உள்ள தொழிற்சாலைகளில் வெள்ள நீர் செல்லும் நிலை ஏற்பட்டதாக தொலைக்காட்சி செய்தி வெளியிடப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் மண்டல செயற் பொறியாளர், செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அவ்வாய்வின் போது மேற்படி சாலையில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாய் மேல்மூடியினை அகற்றிடவும், அக்கால்வாய் உள்ள மண் துகழ்களை தூர்வாரி, சாலை உயரத்திற்கும் மற்றும் மழைநீர் Disposal Point வழியே செல்ல ஏதுவாகவும் கால்வாயினை உயர்த்தி சீரமைப்பு பணியினை மேற்கொள்ளவும், மேல்மூடி அமைக்க கோரி தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணியினை மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ரூ.இலட்சத்தில்)

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை |
|---|---|---|---|
| 1. | 16 (ம) 18 | நூம்பல் பிரதான சாலையில் உள்ள ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள கால்வாய் மேல்மூடி அகற்றி தூர்வாறும் பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் கால்வாயினை உயர்த்தி சீரமைப்பு பணிகள் மேற்கொண்டு மேல்மூடி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | 63.00 |

<u>அலுவலக குறிப்பு :–</u>

அ) மன்றம் அனுமதிஅளிக்கலாம்.

ஆ) மேற்படி பணியை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

**<u>பொருள் எண்.8</u>**

திருவேற்காடு நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுபகுதிகளில் 31,554 வீடுகளும், 1,16,216 மக்கள் தொகையும் உள்ளது. இந்நகரம் சென்னை மாநகராட்சியினை ஒட்டிஅமைந்துள்ள சிறப்புநிலை தகுதி கொண்ட நகராட்சியாகும். இந்நகராட்சிப்பகுதிகளில் வரலாற்று சிறப்புமிக்க இருகோவில்களும் (ஸ்ரீதேவி கருமாரியம்மன் கோவில் மற்றும் வேதபுரீஸ்வரர் ஆலயம்) அமைந்துள்ளது.

இந்நகரம்கோயில் நகரமென்பதால், தினசரி இக்கோயில்களுக்குசுமார் 2,000 மக்கள் வந்து செல்கின்றனர். விழாக்காலங்களில் இதுபலமடங்கு அதிகரிக்கும். இந்நகராட்சியில் ஒரு பேருந்து நிலையமும் உள்ளது. இந்நகரத்திற்கு தினசரி வந்து செல்வோரின்எண்ணிக்கை 10,000 பேர்ஆகும்.

தற்போது, வடக்கிழக்கு பருவமழை துவங்கி பெய்து வருவதாலும், இந்நகராட்சி பகுதிகளில் உள்ளவீடுகள் மற்றும் வணிக தொழில் நிறுவனங்களில் கொசுபுழு உள்ளனவா என கண்டறிந்து கொசுபுழு ஒழிப்பு பணிகள் மற்றும் முதிர்கொசு ஒழிக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று

வருகின்றது.தற்போது கொசு ஒழிப்பு பணிகளுக்கு தேவைப்படும் அத்தியாவசிய பொருட்களான கொசுபுழு ஒழிப்பு மருந்து அபேட், முதிர்கொசு ஒழிப்பு மருந்து பைரத்திரம் 2% எக்ஸ்ட்ராக்ட், BT லிக்யூட் மற்றும் மாலத்தியான் டெக்கினிக்கல்ளின் இருப்பு குறைவாக இருப்பதாலும், பொது சுகாதார அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு பின்வரும் கொசுஒழிப்பு பொருட்களை கொள்முதல் செய்யவும், இதற்காகும் உத்தேச செலவினம்ரூ.9.90 இலட்சத்தினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, மன்றத்தலைவரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அபேட் | 200 லிட்டர் |
| மாலத்தியான் | 200 லிட்டர் |
| பைத்ரேயம் 2% எக்ஸ்ட்ராக்ட் | 200 லிட்டர் |
| BT லிக்யூட் | 100 லிட்டர் |

<u>அலுவலக குறிப்பு :–</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்

2)பொது சுகாதாரபணியின் அவசர அவசியம் கருதி, மேற்கண்ட கொசு ஒழிப்பு அத்தியாவசிய பொருட்களை பொருட்கள் வாங்கிட மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 4729/2024/ எச்1)

---

<u>பொருள் எண்.9</u>

திருவேற்காடுநகராட்சிக்குட்பட்ட 18 வார்டுபகுதிகளில் 31,554 வீடுகளும், 1,16,216 மக்கள்தொகையும் உள்ளது. இந்நகரம் சென்னை மாநகராட்சியினை ஒட்டி அமைந்துள்ள சிறப்புநிலை தகுதி கொண்ட நகராட்சியாகும்.இந்நகராட்சிப் பகுதிகளில் வரலாற்று சிறப்புமிக்க இரு கோவில்களும் (ஸ்ரீதேவி கருமாரியம்மன் கோவில் மற்றும் வேதபுரீஸ்வரர் ஆலயம்) அமைந்துள்ளது.

இந்நகரம் கோயில் நகரமென்பதால், தினசரி இக்கோயில்களுக்கு சுமார் 2,000 மக்கள் வந்து செல்கின்றனர். விழாக்காலங்களில் இதுபல மடங்கு அதிகரிக்கும். இந்நகராட்சியில் ஒரு பேருந்து நிலையமும் உள்ளது. இந்நகரத்திற்கு தினசரி வந்து செல்வோரின் எண்ணிக்கை 10,000 பேர் ஆகும்.

தற்போது,வடக்கிழக்கு பருவமழை துவங்கி பெய்து வருவதாலும் சாலை ஓரங்களில் தண்ணீர் தேக்கம் இன்றி அப்புறப்படுத்தி கிருமிநாசினிகள் தொடர்ந்து அவ்வப்போது தெளிக்க வேண்டி இருப்பதாலும், பண்டிகைகாலங்களில் நோய்பரவலை தடுக்கும்பொருட்டு பொதுமக்கள்கூடும் இடங்களில் நெடுஞ்சாலை மற்றும் உட்புறவீதிகளில் தினசரிசுத்தம் செய்து தொற்றுநீக்கி கிருமிநாசினி தெளிக்கும் பணிகள் தொடர்ந்து செய்து வரவேண்டியுள்ளது. தொற்று நீக்கி பொருட்கள், பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு தூள் பினாயில் மற்றும் லைசால் போன்ற கிருமிநாசினி பொருட்கள் அதிகமாக தேவைப்படுகின்றது. தற்போது இருப்பு குறைவாக உள்ளது.

ஆதலால்,பொதுசுகாதார நலன் மற்றும் அவசர அவசியம் கொண்டு கீழ்கண்ட கிருமிநாசினி பொருட்கள் உடன் வாங்கி வழங்கிடவும், அதற்காகும் தோராய மதிப்பு ரூ.9.90 இலட்சத்தினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவிட மன்றத்தின்அனுமதிவேண்டப்படுகிறது.

- பிளிச்சிங்பவுடர் – 10000 கி.கி
- நீர்த்தசுண்ணாம்பு – 10000 கி.கி
- பினாயில் – 1000 லிட்டர்

- லைசால் – 1000 லிட்டர்
- லைமென்கிராஸ் – 500லிட்டர்

<u>அலுவலக குறிப்பு :–</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்

2)பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி, மேற்கண்ட கிருமிநாசினி பொருட்கள் வாங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4590/2024/ எச்1)

---

<u>பொருள் எண்.10</u>

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள அரசுதுவக்கப்பள்ளி, உள்ள நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் கழிவறைகளுக்கு பராமரிப்பு பணி செய்யரூ.8.20 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 31.07.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் M/s: ஆரோக்கியநாதன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற நிறுவனத்தால் ஒப்பந்தப்புள்ளிவைப்புத் தொகைரூ.8200/– ஐ 31.07.2018–ல்செலுத்தப்பட்டுள்ளது. தற்போது M/s: ஆரோக்கியநாதன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற நிறுவனத்தின் 23.05.2025ஆம் தேதிய கடிதத்தில் மேற்படி ஒப்பந்தப்புள்ளிவைப்புத் தொகையை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்படிவைப்புத் தொகை காலாவதியாகிவிட்டதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை ரூ.8200/–ஐ M/s:ஆரோக்கியநாதன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற நிறுவனத்திற்கு வழங்கமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

1)மன்றம்அனுமதிக்கலாம். (ந.க.எண்.4743/2024/எச்1)

---

<u>பொருள் எண்.11</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் கடித ந.க.எண்.1919/2022/இஏ2, நாள்.13.05.2025–ன்படி 15வது வது நிதிக்குழு மான்யம் 2025–26 (Un–Tied Grant) மற்றும் தேசிய சுத்தமான காற்று திட்டத்தின் (NCAP–AAQ) கீழ் நகர செயல் திட்டம் செயல்படுத்துதல் (Implementation of City Action Plan under National Clean Air Programme (NCAP–AAQ))–ன் திட்ட நிதியின் கீழ் திருவேற்காடு நகராட்சியில் சாலைப்பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு அனுப்பப்பட்டது.

அதன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் கடித ந.க.எண்.11919/2022/EA–2, நாள்.30.09.2025–ன்படி 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2024–2025 மற்றும் 2025–2026 (Ambient Air Quality for Urban Agglomeration) கீழ்க்கண்ட பணிளுக்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒதுக்கீடு செய்யப்பட்ட வருடம் / தொகை (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | | | 2024–2025 | 2025–2026 |
| 1. | 1 | பஜனை கோயில் தெருவிற்கு | 25.00 | 25.00 | – |

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒதுக்கீடு செய்யப்பட்ட வருடம் / தொகை (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | | | 2024–2025 | 2025–2026 |
| | | (015001R791) தார்தளம் அமைத்தல் | | | |
| 2. | 5 | எட்டீஸ்வரன் கோயில் தெருவிற்கு (015005R007) தார்தளம் அமைத்தல். | 25.00 | 25.00 | – |
| 3. | 8 | வி.ஜி.என் 4வது பிரதான சாலைக்கு (015008R215) தார்தளம் அமைத்தல். | 20.00 | 20.00 | – |
| 4. | 8 | வி.ஜி.என் 5வது பிரதான சாலைக்கு (015008R216) தார்தளம் அமைத்தல். | | | |
| 5. | 9 | பல்லவன் நகர் 2வது தெருவிற்கு (015009R522) தார்தளம் அமைத்தல். | 23.00 | 23.00 | – |
| 6. | 9 | பல்லவன் நகர் 3வது தெருவிற்கு (015009R523) தார்தளம் அமைத்தல். | | | |
| 7. | 9 | பல்லவன் நகர் 4வது தெருவிற்கு (015009R524) தார்தளம் அமைத்தல். | | | |
| 8. | 9 | பல்லவன் நகர் 3வது பிரதான சாலைக்கு (015009R529) தார்தளம் அமைத்தல். | | | |
| 9. | 14 | கிருஷ்ணா நகர் 1வது தெருவிற்கு (015014R644) தார்தளம் அமைத்தல். | 18.00 | 7.00 | 11.00 |
| 10. | 14 | கிருஷ்ணா நகர் 2வது தெருவிற்கு (015014R645) தார்தளம் அமைத்தல். | | | |
| 11. | 14 | அன்னை அபிராமி நகர் 1வது தெருவிற்கு (015014R702) தார்தளம் அமைத்தல். | | | |
| 12. | 15 | பகுதி IV பிரதான சாலைக்கு (015015R511) | 25.00 | – | 25.00 |

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒதுக்கீடு செய்யப்பட்ட வருடம் / தொகை (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | | | 2024–2025 | 2025–2026 |
| | | தார்தளம் அமைத்தல். | | | |
| 13. | 15 | பகுதி IV 1வது குறுக்கு தெருவிற்கு (015015R512) தார்தளம் அமைத்தல். | | | |
| 14. | 15 | பகுதி IV 2வது குறுக்கு தெருவிற்கு (015015R513) தார்தளம் அமைத்தல். | | | |
| 15. | 15 | பகுதி IV 3வது குறுக்கு தெருவிற்கு (015015R514) தார்தளம் அமைத்தல். | | | |
| 16. | 16 | வெள்ளாளர் தெருவிற்கு (015016R303) தார்தளம் அமைத்தல். | | | |
| 17. | 16 | ராஜீவ் நகர் பிள்ளையார் கோயில் தெருவிற்கு (015016R304) தார்தளம் அமைத்தல். | 23.00 | – | 23.00 |
| 18. | 16 | காந்தி தெருவிற்கு (015016R302) தார்தளம் அமைத்தல். | | | |
| 19. | 17 | கிருஷ்ணா நகர் மசூதி தெருவிற்கு (015017R410) தார்தளம் அமைத்தல். | 30.00 | – | 30.00 |
| 20. | 17 | முகாம்பிகை நகர் 1வது பிரதான சாலைக்கு (015017R426) தார்தளம் அமைத்தல். | | | |
| 21. | 2 | சக்தி விநாயகர் தெருவிற்கு (015002R823) சிமெண்ட் தளம் அமைத்தல். | 20.00 | – | 20.00 |
| 22. | 11 | வெங்கடேஸ்வரா நகர் 1வது குறுக்கு தெருவிற்கு (015011R759) சிமெண்ட் தளம் அமைத்தல். | 19.00 | – | 19.00 |

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒதுக்கீடு செய்யப்பட்ட வருடம் / தொகை (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | | | 2024-2025 | 2025-2026 |
| 23. | 11 | வெங்கடேஸ்வரா நகர் 2வது குறுக்கு தெருவிற்கு (015011R760) சிமெண்ட் தளம் அமைத்தல். | | | |
| 24. | 11 | வெங்கடேஸ்வரா நகர் 3வது குறுக்கு தெருவிற்கு (015011S138) சிமெண்ட் தளம் அமைத்தல். | | | |
| 25. | 11 | வெங்கடேஸ்வரா நகர் 3வது குறுக்கு தெருவிற்கு (015011S139) சிமெண்ட் தளம் அமைத்தல். | | | |
| | | மொத்தம் | 228.00 | 100.00 | 128.00 |

மேற்படி பணிகளின் மீது தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, மேற்படி அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு, 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (Ambient Air Quality for Urban Agglomeration) 2024-25 மற்றும் 2025-26 ஆம் நிதியாண்டின் கீழ் நிதி ஒதுக்கீடு அளித்து உரிய நிபந்தனைகளின் படி மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டு வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

அ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

---

<u>பொருள் எண்.12</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் 26.07.2025 அன்று திருவேற்காடு நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட நேரடி ஆய்வில் நகராட்சி பராமரிப்பில் உள்ள பூங்காக்கள், சாலைகள் மற்றும் திறந்த வெளியிடங்கள் ஆகியவற்றில் உள்ள புற்கள், செடி கொடிகள் அகற்றுவதற்கு 2 எண்ணிக்கை Gross Cutting Machine கொள்முதல் செய்து பூங்காக்களை முறையாக பராமரிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார். அதன்படி மேற்காணும் 2 எண்ணிக்கை Gross Cutting Machine கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/- ஆகும். இச்செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

---

பொருள் எண்.13

திருவேற்காடு நகராட்சியில் பொது நிதி 2025–2026–ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 04.09.2025 ஆகிய தினங்களில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது தொழில்நுட்ப கூர்ந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை 17.09.2025–ல் விலை உறை திறக்கப்பட்டத்தில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்பு நோக்கு செய்யப்பட்ட விபரம் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 1 | சுந்தரசோழபுரம் பிரதான சாலை, சக்திவேல் நகர் மற்றும் ஏ.எஸ்.கே நகர் ஆகிய பகுதிகளில் மின்சார வாரியம் மூலம் பூமிக்கு அடியில் உயர்மின் அழுத்த கேபிள் பதித்ததால் சேதமடைந்த சாலைகள் மற்றும் குடிநீர் குழாய்கள் சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். | 165.00 | 1) M/s. ABL Constructions (L1)<br>2) M/s. KPJ Constructions (L2) | 0.04 % மதிப்பீட்டை விட குறைவு<br>2.01 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | 6 (ம) 8 | கங்கையம்மன் கோயில் தெரு முதல் காமராஜர் தெரு வரையில் மின்சார வாரியம் மூலம் பூமிக்கு அடியில் உயர்மின் அழுத்த கேபிள் பதித்ததால் சேதமடைந்த சாலைகள் மற்றும் குடிநீர் குழாய்கள் சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். | 99.00 | 1) M/s.Sri Selliamman & Co (L1)<br>2) Thiru.P.Chandran (L2) | 1.86 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.07 % மதிப்பீட்டை விட குறைவு |
| 3. | 14 | சிவன் கோயில் பிரதான சாலை மற்றும் சக்திவேல் நகர் பிரதான சாலையில் மின்சார வாரியம் மூலம் பூமிக்கு அடியில் உயர்மின் அழுத்த கேபிள் பதித்ததால் சேதமடைந்த சாலைகள் மற்றும் குடிநீர் குழாய்கள் சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். | 94.00 | 1) M/s.Jeeva Enterprises (L1)<br>2) Thiru.P.Chandran (L2) | 2.20 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.79 % மதிப்பீட்டை விட குறைவு |

அலுவலக குறிப்பு:–

அ) மேற்படி பணியில் ஒவ்வொரு பணிகளிலும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதன் எதிரோ குறிப்பிட்டுள்ளபடி குறைந்த

ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள L1 ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கிட தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

---

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்கு சொந்தமான பொலிரோ வாகனம் எண் TN 20 AJ 7480–ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சர்வீஸ் செய்து தரக்கோரி அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக மகேந்திரா நிறுவனத்தின் விற்பனையாளர் MsJayasakthi Body Works No.1/1A Thandurai Main Road Panaveduthottam, Poonamallee. Chennai–56 நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோரியதின் அடிப்படையில், மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து தர அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ.180 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ)மேற்படி வாகனத்தின் அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி, நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பழுதுகளை சரிசெய்ய அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ)மேற்படி பணிக்கான தொகையினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

**பொருள் எண்.15**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5–ல் தினேஷ் நகர் மற்றும் நியூ, சென்சூரியன் நகர் பகுதியில் சேகரமாகும் மழைநீர் ராம்பூர்னா நகர் வழியே ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாய் மூலம் மழைநீர் வெளியேறுகிறது. இந்நிலையில் மேற்படி வடிகால்வாய் பிரதான கால்வாயுடன் இணைக்கப்படாததால், சாலையில் மழைநீர் தேங்கும் நிலை உள்ளது. இதனால் பொது சுகாதார சீர்கேடு மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் நிலை ஏற்படுகிறது. மேலும் அப்பகுதி பொதுமக்களிடமிருந்தும், நகர்மன்ற உறுப்பினரிடமிருந்தும் மழைநீர் வடிகால்வாய் வசதி அமைத்து தர புகார் வந்த வண்ணம் உள்ளது.

எனவே, ராம்பூர்ணா நகரில் விடுப்பட்டுள்ள பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைக்கவும், அக்கால்வாயினை பிரதான கால்வாயுடன் இணைக்கவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ3.20 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிஅளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

**பொருள் எண்.16**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்-2 சக்தி கருமாரியம்மன் நகர் பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் இல்லாததால் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி வெளியேற இயலாத ஏற்படுகிறது. இதனால் பொதுமக்களின் அவதிக்குள்ளாவதுடன் பொது சுகாதாரம் மற்றும் நோய் தொற்றுக்கள் ஏற்படவாய்ப்புள்ளது. எனவே, மேற்படி பகுதிகளில் பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பகுதிக்கு மழைநீர் வடிகால் மற்றும் மேல்மூடி அமைக்க அதற்குண்டான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.24.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி பணிக்காக செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

---

**பொருள் எண்.17**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வார்டு எண்.6 சாஸ்திரி தெரு, பாடசாலை தெரு, காமராஜர் தெரு வார்டு எண்.7 அர்ச்சனா தெரு, ஜோதி நகர். பொன்னியம்மன் நகர் சில்வர் பாம்ஸ் அவென்யூ, பெருமாள் கோயில் தெரு வார்டு எண் B மெட்ரோ சிட்டி, வார்டு எண்.9 ராணி அண்ணா நகர், வார்டு எண் 13 வீரராகவபுரம் மற்றும் வார்டு எண் 15 பத்மாவதி நகர் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோக பிரதான குழாய்கள் அமைக்கப்பட்டு 10 வருடங்களுக்கு மேலான நிலையிலும், அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு மிகவும் சேதமடைந்துள்ளதாலும் தினசரி குடிநீர் விநியோகம் பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளதால். மேற்படி பகுதிகளில் புதியதாக பைப்லைன் அமைக்க அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9,00 இலட்சத்தினை பொது / குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிஅளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

**பொருள் எண்.18**

திருவேற்காடு நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2025-26 ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 25.08.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ரூ. இலட்சத்தில்)

| வ. எ ண். | வார்டு எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 5 | திருவேற்காடு நகராட்சி வார்டு எண்.5-ல் மேல்அயனம்பாக்கம் பகுதியில் செயல்பட்டு வரும் அமுதம் நியாய விலைக்கடைக்கு (கடை குறியீடு எண்.FA074) புதிய நியாய விலைக்கடை அமைத்தல். | 13.50 | Thiru.S.G.Narayanan (L1)<br><br>M/s.AVN Infra Tech (L2) | 0.08 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.37 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | 11 | திருவேற்காடு நகராட்சி வார்டு எண்.11 வேதபுரீஸ்வரர் ஆலயம் அருகில் பேருந்து நிழற்குடை அமைத்தல். | 10.00 | M/s.AVN Infra Tech (L1)<br><br>M/s.JBS Infra INC (L2) | 0.06 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.28 % மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) திருவள்ளூர் மாவட்ட, மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அவர்களின் செயல்முறை ஆணை கடித நக.எண்.2117/2025/அ10, நாள்.31.07.2025-ன்படி நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு பெறப்பட்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

ஆ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள L1 ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

இ) பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கிட தொடர் நடவடிக்கை மேற்கொண்மைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

---

<u>பொருள் எண்.19</u>

திருவேற்காடு நகராட்சி பகுதியில் அமையப்பெற்றுள்ள 13 அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகளில் அரசின் நெறிமுறைகளுக்கேற்ப, தூய்மை பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.978, நாள். 09.07.2025ல் மகளிர் சுய உதவி குழுவின் மூலமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சந்தை விலை விகித

அடிப்படையில் பணியாளர்கள் ஈடுபடுத்தி கழிவறை தூய்மை பணிகள் 01.08.2025 முதல் மூன்று மாதங்களுக்கு (31.10.2025) மேற்கொள்ள தீர்மானித்தவாறு, M/s:வடநூம்பல் பகுதி அளவிலான குழு என்ற கூட்டமைப்பிற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி கூட்டமைப்பின் பணி உத்தரவு காலம் 31.10.2025 வரை முடிவடைவதால், பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி கூட்டமைப்பின் மூலம் 01.11.2025 முதல் 31.03.2026 வரையில் மேலும் 5 மாதங்களுக்கு பணி உத்தரவு நீட்டிப்பு வழங்க மன்றத்தின் வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4743/2024/எச்1)

---

<u>பொருள் எண்.20</u>

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில், டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் நகர்மன்ற தீர்மானம் எண்.977, நாள் 09.07.2025ன் அடிப்படையில் மகளிர் சுய உதவிக் குழு / நிறுவனங்கள் மூலம் கடந்த 01.08.2025 முதல் 31.10.2025 முடிய மூன்று மாதங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது பருவ மழைக்காலம் துவங்கி உள்ள நிலையில், இவர்களது பணி உத்தரவு காலம் 31.10.2025 உடன் முடிவடைவதாலும், டெங்கு காய்ச்சல் அறிகுறிகள் தென்படுவதால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளுக்கேற்ப, பொது மக்களின் நலன் மற்றும் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி, ஏற்கனவே நகர்மன்றத்தால் தீர்மானித்தவாறு அக்டோபர் 2025 வரையில் ஈடுபடுத்தப்பட்டு வரும் அதே மகளிர் சுய உதவிக்குழு / நிறுவனங்களை கொண்டு மீண்டும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகளை, அதே விலை விகிதத்தில் 01.11.2025 முதல் 31.03.2025 வரையில் மேலும் 5 மாதங்களுக்கு நீட்டிப்பு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1105/2023/எச்1)

---

<u>பொருள் எண்.21</u>

திருவேற்காடு நகராட்சியில், பொது சுகாதார பிரிவில் இரண்டு எண்ணிக்கையிலான கழிவு நீர் அகற்றும் வாகனங்கள் உள்ளன. மேற்கண்ட இரு வாகனங்களும், இந்நகராட்சியில் போதிய கழிவுநீர் வாகனங்களை இயக்க தகுதிவாய்ந்த ஒட்டுநர்கள் இல்லாமல் தற்போது பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது.

இந்நகராட்சியில் "மழைக்காலத்தின் போது மழைநீர் வடிகால்வாய்களில் நிரம்பி, அவை அகற்ற முடியாத நிலை ஏற்படுவதாலும் அவைகளை இந்த கழிவுநீரகற்று வாகனங்களை கொண்டு அப்புறப்படுத்தவும் மேலும் நகரின்

வீடுகள் வணிக நிறுவனங்களின் கழிவுநீர் அகற்றவும் இந்த வாகனங்கள் பெரிதும் உதவிகரமாக அமைவதுடன் இதனால் நகராட்சி வருவாய் பெற வழிவகை செய்யப்படுவதுடன் நகரின் தூய்மையும் பேணிகாக்கப்படுகிறது.

ஆதலால், நிர்வாக நலன் மற்றும் நகராட்சியின் வருவாயின் பெருக்கும் வகையில், தற்போது பழுதடைந்து உள்ள 2 கழிவுநீர் அகற்றும் வாகனங்களை (Sullage Lorries) பழுது சீர் செய்யவும் மற்றும் வாகனங்களை பழுது நீக்கம் செய்ய ஆகும் செலவினத்தினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும்:

மேலும், இந்த பிரத்தியேக வாகனங்களை இயக்க ஏதுவாக 2 தகுதி வாய்ந்த (Heavy Vehicle Driving Licence with 2-3 years Experience) ஆட்சியர் அங்கீகரித்துள்ள சந்தை விலை விகித அடிப்படையில் தினக்கூலி அடிப்படையில் ஈடுபடுத்திக் கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 5355/2025/எச்1)

---

<u>பொருள் எண்.22</u>

2026ம் ஆண்டு நடைபெறவிருக்கும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் பணிகள் விரைவில் நடைபெற உள்ளன. தற்போது திருவேற்காடு நகராட்சியில் தேர்தல் பணிகள் தொடபான பணிகளை மேற்கொள்ள கணினி மற்றும் தட்டச்சு சார்ந்த அலுவலக பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இந்நகராட்சி ஆணையாளர், திருவேற்காடு நகராட்சிக்கு உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் என்பதாலும், தற்போது நடைபெறவுள்ar Special Intensive Revision 2025 தொடர்பாக ஆவடி தாலுக்காக அலுவலகத்தில் இந்நகராட்சியின் சார்பில் தட்டச்சு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், இந்நகராட்சிக்கு அரசாணை எண்.110-ன்படி தோற்றுவிக்கப்பட்ட நான்கு தட்டச்சர் பணியிடங்களும் பூர்த்தி செய்யப்படாமல் நிலுவையில் உள்ள நிலையில், தேர்தல் அவசர அவசியம் கருதி தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சில் (ஏதாவது ஒன்றில் முதுநிலை - Senior Gradin) தேர்ச்சி பெற்ற 2 தற்காலிக தட்டச்சர்கள் 01.011,2025 முதல் சட்டமன்ற தேர்தல்-2026 முடியும் வரை நியமனம் செய்யப்பட அவசியம் எழுகிறது.

ஆதலால், தேர்தல் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தட்டச்சர் 2 நபர்கள் (Typist on Dally Wages basis) நியமனம் செய்துக் கொள்ளவும் மற்றும் மேற்படி தட்டச்சருக்கு, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆண்டு தோறும் நிர்ணயிக்கும் சந்தை விலை விகிதத்தில் ஊதியம் வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி பெற ஏதுவாக மன்றப் பொருள் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 5354/2025/எச்1)

---

<u>பொருள் எண்.23</u>

திருவேற்காடு நகராட்சிக்குட்பட்ட கோலடி கிராமம், சர்வே எண்.72/2, 77/1 & 2B–ல் 5677 ச.மீ இடத்தின் உரிமையாளர் Tmt.K.Varalakshmi, Co–owner cum GPA on behalf of K.Jayashree & 2 others, என்பவரின் விண்ணப்பத்தின் பேரில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் கடிதம் எண். Layout–1/0250/2022, நாள்.29.07.2024–ன் படி மேற்படி மனைப்பிரிவில் 27 மனைகள் கொண்ட மனைக்கு திட்ட அனுமதி எண்.15881, PPD/LO.No.164/2024 நாள்.29.07.2024–ன் படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் 2318 ச.மீ சாலைகள் மற்றும் (P.P–1) 17ச.மீ பொது உபயோகத்திற்காகவும் (P.P–2) 18ச.மீ மின்சார வாரியத்திற்காகவும் தானப்பத்திர பதிவு எண்.1581/2024, நாள்.04.07.2024 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மேற்காணும் மனைபிரிவுக்கு பாதாள சாக்கடை வசதி செய்தல் ஆகிய அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்காக நகராட்சி பொறியியல் பிரிவின் மூலம் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்ட தொகை கீழ்கண்டவாறு செலுத்தப்பட்டது.

| வ.எண் | கட்டண விவரம் | தொகை ரூ இலட்சம் | ரசீது எண்/ நாள் |
|---|---|---|---|
| 1. | பாதாள சாக்கடை பணிகள் | ரூ.12.50 | 0012867/ 01.11.2025 |

மனுதாரர் சொந்த செலவில் தார் சாலை, குடிநீர் பைப்லைன், மழைநீர் கால்வாய் மற்றும் தெருவிளக்கு பணிகள் CMDA வரைபடத்தில் உள்ளவாறு செய்து முடிக்கப்பட்டுள்ளது என்று பொறியியல் பிரிவின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகரமைப்பு பிரிவில் மனைப்பிரிவு கட்டணம் செலுத்திய பின்னர் மேற்படி மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்க வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:–</u>

சென்னை பெருநகர வளர்ச்சி குழுத்தால் அங்கீகரிக்கப்பட்ட மேற்படி மனைபிரிவிற்கான அடிப்படை வசதிகள் இடத்தின் உரிமையாளர் மூலம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பொது ஒதுக்கீடுகளுக்கான தானப்பத்திரங்கள் பெறப்பட்டு உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

---

<u>பொருள் எண்.24</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3ல் எம்.ஆர் நகர் விரிவாக்கம் பகுதியில் மழைக்காலங்களில் சாலைகளில் மழைநீர் தேங்கி பொது சுகாதார சீர்கேடு மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் நிலை ஏற்படுகிறது. மேலும் அப்பகுதி பொதுமக்களிடமிருந்தும், நகர்மன்ற உறுப்பினரிடமிருந்தும் மழைநீர் வடிகால்வாய் வசதி அமைத்து தர புகார் வந்த வண்ணம் உள்ளதால் மேற்படி மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைக்க அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.25.00

இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிஅளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

<u>பொருள் எண்.25</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 4-ல் அண்ணா தெருவில் மழைநீர் வடிகால்வாய் வசதிகள் இல்லாமல் இருப்பதால் மழைக்காலங்களில் சாலைகளில் மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கும். வாகன ஓட்டிகளுக்கு இடையூறாக இருப்பதுடன், பொது சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளது. மேலும் கிருஷ்ணா நகர் 2வது தெரு மற்றும் ரெட்டி குறுக்கு தெருவில் உள்ள சாலை மிகவும் சேதமடைந்து வாகன ஓட்டிகளுக்கும் இடையூறாக உள்ளதாலும், அப்பகுதி பொதுமக்களிடமிருந்தும். நகர்மன்ற உறுப்பினரிடமிருந்தும் புகார் வந்த வண்ணம் உள்ளது.

எனவே அண்ணா தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்திடவும், கிருஷ்ணா நகர் 2-வது தெரு மற்றும் ரெட்டி குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைத்திடவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.20.00 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிஅளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

<u>பொருள் எண்.26</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 6-ல் நேரு தெரு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் வசதி இல்லாத காரணத்தினால், மழைக்காலங்களில் சாலைகளில் மழைநீர் தேங்கி பொது சுகாதார சீர்கேடு மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் நிலை ஏற்படுகிறது. மேலும், பாடசாலை 3வது தெரு பகுதியில் உள்ள சாலை மிகவும் சேதமடைந்து வாகன ஓட்டிகளுக்கும் இடையூறாக உள்ளதாலும், வெள்ளாளர் தெரு பகுதியில் அமைத்துள்ள பொது விநியோக கடை முன்புறம் பகுதி மழைக்காலங்களில் சேரும் சகதியுமாக உள்ளதால் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. மேலும், மேற்படி பணிகள் குறித்து அப்பகுதி பொதுமக்களிடமிருந்தும், நகர்மன்ற உறுப்பினரிடமிருந்தும் புகார் வந்த வண்ணம் உள்ளது.

எனவே நேரு தெரு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் வசதி அமைத்திடவும். பாடசாலை தெருவிற்கு சிமெண்ட் தளம் அமைக்கவும் மற்றும் வெள்ளாளர் தெரு பகுதியில் அமைந்துள்ள பொது விநியோக கடை முன்புற பகுதியில் சிமெண்ட் தரைதளம் அமைத்திடம் அதற்காக தயாரிக்கப்பட்ட

மதிப்பீட்டு தொகை ரூ.20.00 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிஅளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

<u>பொருள் எண்.27</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 7-ல் பொன்னியம்மன் நகர் காமராஜர் தெருவில் உள்ள சாலை மிகவும் சேதமடைந்து வாகன ஓட்டிகளுக்கும் இடையூறாக உள்ளது. மேலும், அப்பகுதி பொதுமக்களிடமிருந்தும், நகர்மன்ற உறுப்பினரிடமிருந்தும் சாலையினை சீரமைத்து தர கோரி புகார் வந்த வண்ணம் உள்ளதால், மேற்படி சாலையினை தார்தளமாக அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.21.50 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிஅளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

<u>பொருள் எண்.28</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 10 பகுதியில் உள்ள ராஜரத்தினம் நகர் பிரதான சாலை மற்றும் அர்ஜீனமேடு பகுதிகளில் அமைந்து தார்சாலையும், ராஜரத்தினம் நகர் 5வது குறுக்கு தெரு பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் பணிகள் முடிக்கப்பட்டு சாலை மிகவும் சேதமடைந்து உள்ளதால் பொதுமக்களுக்கும். வாகன ஓட்டிகளுக்கு இடையூறு ஏற்படுவதுடன், பள்ளி செல்லும் மாணவ மாணவியர்களுக்கு மிகவும் சிரமாக உள்ளதாலும், அச்சாலை குண்டும் குழியுமாக உள்ளது. இதனால், மழைக்காலங்களில் அதிக அளவில் மழைநீர் தேங்கிறது.

எனவே, பொதுமக்களின் சாலை பயன்பாட்டின் அவசியத்தினை கருத்தில் கொண்டு ராஜரத்தினம் நகர் பிரதான சாலை மற்றும் அர்ஜீனமேடு பகுதிகளில் தார்சாலை அமைத்திடவும், ராஜாத்தினம் நகர் 5வது குறுக்கு தெரு பகுதியில் உள்ள சிமெண்ட் தளம் அமைத்திடவும், அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிக்காக செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

---

<u>பொருள் எண்.29</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18 பகுதியில் உள்ள ஐ.சி.எல் குடியிருப்பு பிரதான சாலை மற்றும் ராஜேஷ் கார்டன் குறுக்கு தெரு பகுதிகளில் அமைந்து தார்சாலையும் ஜட்ஜஸ் காலனி 2வது குறுக்கு தெரு மற்றும் ராம் நகர் பகுதியில் உள்ள சாலைகளும் மிகவும் சேதமடைந்து உள்ளதால் பொதுமக்களுக்கும், பள்ளி செல்லும் மாணவ மாணவியர்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படுவதுடன், அச்சாலை குண்டும் குழியுமாக உள்ளது. இதனால், மழைக்காலங்களில் அதிக அளவில் மழைநீர் தேங்குதால் பொதுமக்களும் வாகன ஒட்டிகளுக்கும் இடையூறாக உள்ளது.

எனவே, பொதுமக்களின் சாலை பயன்பாட்டின் அவசியத்தினை கருத்தில் கொண்டு ஐ.சி.எல் குடியிருப்பு பிரதான சாலை மற்றும் ராஜேஷ் கார்டன் குறுக்கு தெரு பகுதிகளில் தார்சாலை அமைத்திடவும், ஜட்ஜஸ் காலனி 2வது குறுக்கு தெரு மற்றும் ராம் நகர் பகுதியில் உள்ள சிமெண்ட் தளம் அமைத்திடவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.21.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிக்காக செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

---

<u>பொருள் எண்.30</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12ல் ஈஸ்வரன் நகர் 1வது குறுக்கு தெரு 2வது குறுக்கு தெரு மற்றும் 6வது தெருவில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால் மிகவும் தாழ்வாக உள்ளதாலும் மழைக்காலங்களில் சாலைகளில் மழைநீர் தேங்கி பொது சுகாதார சீர்கேடு மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு எற்படும் நிலை ஏற்படுகிறது. மேலும், ஈஸ்வரன் நகர் பிரதான சாலை மற்றும் செல்வகணபதி நகர் 1வது தெரு பகுதிகளில் உள்ள சாலை மிகவும் சேதமடைந்து வாகன ஓட்டிகளுக்கும் இடையூறாக உள்ளதாலும், அப்பகுதி பொதுமக்களிடமிருந்தும்,நகர்மன்ற உறுப்பினரிடமிருந்தும் புகார் வந்த வண்ணம் உள்ளது.

எனவே, ஈஸ்வரன் நகர் 1வது குறுக்கு தெரு, 2வது குறுக்கு தெரு மற்றும் 6வது தெருவில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால்வாயினை தூர்வாரிடவும் கால்வாயின் மட்டத்தினை சாலை விட உயர்த்தி அமைத்திடவும். ஈஸ்வரன் நகர் பிரதான சாலை மற்றும் செல்வகணபதி நகர் 1வது தெரு பகுதிகளில் உள்ள சாலையினை சிமெண்ட் சாலையாக புதுப்பித்திட அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.21.00 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிஅளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

<u>பொருள் எண்.31</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13-ல் சக்திவேல் நகர் 6வது தெரு. குறுக்கு தெரு மற்றும் பாரதி நகர் 2வது குறுக்கு தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் வசதிகள் இல்லாமல் இருப்பதால், மழைக்காலங்களில் சாலைகளில் மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கும் வாகன ஓட்டிகளுக்கு இடையூறாக இருப்பதுடன், பொது சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளது. மேலும், சக்திவேல் நகர் 6வது தெரு மற்றும் குறுக்கு தெருவில் உள்ள சிமெண்ட் சாலையும், காயத்திரி நகர் பிரதான சாலை, குறுக்கு தெரு மற்றும் காயத்திரி நகர் பூங்கா 2வது குறுக்கு தெருக்களில் உள்ள தார்சாலைகள் மிகவும் சேதமடைந்து வாகன ஓட்டிகளுக்கும் இடையூறாக உள்ளதாலும், அப்பகுதி பொதுமக்களிடமிருந்தும் நகர்மன்ற உறுப்பினரிடமிருந்தும் சாலைகளை சீரமைத்து அடிப்படை வசதிகளை செய்து தர கோரி புகார் வந்த வண்ணம் உள்ளது.

எனவே, சக்திவேல் நகர் 5வது தெரு, குறுக்கு தெரு மற்றும் பாரதி நகர் 2வது குறுக்கு தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்திடவும், சக்திவேல் நகர் 6வது தெரு மற்றும் குறுக்கு தெருக்களுக்கு சிமெண்ட் சாலைகள் அமைக்கவும் மற்றும் காயத்திரி நகர் பிரதான சாலை குறுக்கு தெரு மற்றும் காயத்திரி நகர் பூங்கா 2வது குறுக்கு தெருக்களுக்கு தார்தளம் அமைக்கவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.21.40 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிஅளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

<u>பொருள் எண்.32</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1ல் எல்.கே.பி நகர், பம்ப்ரூம் தெரு. சுந்தரசோழபுரம் அரசினர் உயர்நிலைப்பள்ளி மற்றும் சுந்தரசோழபுரம் பிரதான சாலை ஆகிய பகுதிகளில் மழைக்காலங்களில் சேகரமாகும் மழைநீர் தேங்கி குடியிருப்பு செல்லும் நிலை ஏற்படுகிறது. மேலும், மேற்படி மழைநீரினை மின்மோட்டார் கொண்டு சுந்தரசோழபுரம் பிரதான சாலையின் வழியே மண்கால்வாய் அமைக்கப்பட்டு கூவம் ஆற்றுக்கு செல்லும் வகையில் மழைநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

மேற்படி பகுதியில் தேங்கும் மழைநீரினை வெளியேற்றிட வெள்ளத்தடுப்பு நடவடிக்கை பணியாக எல்.கே.பி நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மேல்மூடி அமைத்திடவும், சுந்தரசோழபுரம் பிரதான சாலையில் தற்காலிக நடவடிக்கை பணியாக கூவம் ஆற்று படுகை வரையில் RCC குழாய் அமைத்திடவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.13.20 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

அ) மன்றம் அனுமதிஅளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

பொருள் எண்.33

திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் பொது பிரிவு, வருவாய் பிரிவு, நகரமைப்பு பிரிவு, கணினி பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவு என பல்வேறு பிரிவுகளில் அலுவலர்கள் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

அதனை தொடர்ந்து, இந்நகராட்சியில் சுகாதாரம் வரிவசூல், காலிமனை வரி, புதிய வரி. தொழில் வரி, ஆக்கிரமிப்பு, மனைப்பிரிவு சம்மந்தமான கோப்புகள், திறந்த வெளி பூங்கா சாலை, மழைநீர் வடிகால்வாய், குடிநீர் கட்டிட பணி மற்றும் தெருமின்விளக்குகள் போன்ற நடைபெற்று வருகிறது. அப்பணிகளை கண்காணிப்பு செய்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், வெளிப்புற பணியாளர் களப்பணியில் மேற்கொள்ளும் போது பணிக்கான விவரங்களை உடனுக்குடன் பகிர்ந்து கொள்ள ஏதுவாக Walkie Talkie மூலம் தொடர்பு கொள்ளவும், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களை உடனுக்குடன் சரி செய்து கொள்ள எதுவாக அமையும்.

எனவே. களப்பணிகள் மேற்கொள்ளும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தேவையான 30 எண்ணிக்கை Walkie Talkie சப்ளை செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ. 12.60 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்க வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி பணிக்காக செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

---

பொருள் எண்.34

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் பயன்பாட்டில் உள்ள ஸ்கார்பியோ வாகனம் எண். TN 12 AU 1818 ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சர்வீஸ் செய்ய தர கோரி அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக மகேந்திரா நிறுவனத்தின் விற்பனையாளர் Ms.Automotive Manufactures Pvt Ltd, 184/2N, 184/1B. Surya Tower. Poonamallee High Road Vengathur, Chennai 602002, என்ற நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோரியதின் அடிப்படையில் மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து தர அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ.24,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

**அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.**

**ஆ) மேற்படி பணிக்கான தொகையினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.**

---

**<u>பொருள் எண்.35</u>**

திருவேற்காடு நகராட்சியில் பொது நிதி 2025-2026-ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 17.09.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ரூ. இலட்சத்தில்)

| வ. எண். | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 15 | காவேரி நகர் பூங்காவில் கூடுதல் பணியாக நடைபாதை மற்றும் இருக்ஈகைகள் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | 5.00 | 1. M/s. Sivthanya Associates (L1)<br>2. M/s. Sundaram and co (L2) | 0.21 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.20 % மதிப்பீட்டை விட அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ) மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதன் எதிரோ குறிப்பிட்டுள்ளபடி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள L1 ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி

உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

---

**<u>பொருள் எண்.36</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதியின் கீழ் வடகிழக்கு பருவமழையினை எதிர்நோக்கி மழை வெள்ளத்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ளவும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 6 வரையுள்ள பகுதிகளில் மழைக்காலங்களில் தாழ்வான இடங்களில் தேங்கம் மழைநீரினை வாடகை அடிப்படையில் 40 HP திறன் கொண்ட டீசல் மோட்டார்கள் பொருத்தி மழைநீரினை வெளியேற்று பணியினை வாடகை அடிப்படையில் சப்ளை செய்தல். | 18.00 |
| 2. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7 முதல் 12 வரையுள்ள பகுதிகளில் மழைக்காலங்களில் தாழ்வான இடங்களில் தேங்கம் மழைநீரினை வாடகை அடிப்படையில் 40 HP திறன் கொண்ட டீசல் மோட்டார்கள் பொருத்தி மழைநீரினை வெளியேற்று பணியினை வாடகை அடிப்படையில் சப்ளை செய்தல். | 18.00 |
| 3. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13 முதல் 18 வரையுள்ள பகுதிகளில் மழைக்காலங்களில் தாழ்வான இடங்களில் தேங்கம் மழைநீரினை வாடகை அடிப்படையில் 40 HP திறன் கொண்ட டீசல் மோட்டார்கள் பொருத்தி மழைநீரினை வெளியேற்று பணியினை வாடகை அடிப்படையில் சப்ளை செய்தல். | 18.00 |
| 4. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 6 வரையுள்ள பகுதிகளில் நகராட்சி சொந்தமான மோட்டார்களை பயன்படுத்தி மழைநீர் வெளியேற்ற தேவையான ஆட்களை சப்ளை செய்தல். | 9.00 |

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 5. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7 முதல் 12 வரையுள்ள பகுதிகளில் நகராட்சி சொந்தமான மோட்டார்களை பயன்படுத்தி மழைநீர் வெளியேற்ற தேவையான ஆட்களை சப்ளை செய்தல். | 9.00 |
| 6. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13 முதல் 18 வரையுள்ள பகுதிகளில் நகராட்சி சொந்தமான மோட்டார்களை பயன்படுத்தி மழைநீர் வெளியேற்ற தேவையான ஆட்களை சப்ளை செய்தல். | 9.00 |
| 7. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 9 வரையுள்ள பகுதிகளில் எதிர்வரவுள்ள வடகிழக்கு பருவமழையின் போது தாழ்வான இடங்களில் தேங்கும் மழைநீரினை ஜே.சி.பி இயந்திரத்தினை வாடகை அடிப்படையில் அமர்த்தி பணி செய்தல். | 7.60 |
| 8. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 முதல் 18 வரையுள்ள பகுதிகளில் எதிர்வரவுள்ள வடகிழக்கு பருவமழையின் போது தாழ்வான இடங்களில் தேங்கும் மழைநீரினை ஜே.சி.பி இயந்திரத்தினை வாடகை அடிப்படையில் அமர்த்தி பணி செய்தல். | 7.60 |
| 9. | நகராட்சி பகுதிகளில் உள்ள சாலைகளின் குறுக்கே மழைநீர் செல்ல ஏதுவாக RCC பைப் சப்ளை செய்தல். | 6.00 |
| 10. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 6 வரையுள்ள மழையினால் பாதிக்கப்பட்ட சாலைகளை செப்பனிடுதல். | 9.90 |
| 11. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7 முதல் 12 வரையுள்ள மழையினால் பாதிக்கப்பட்ட சாலைகளை செப்பனிடுதல். | 9.90 |
| 12. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13 முதல் 18 வரையுள்ள மழையினால் பாதிக்கப்பட்ட சாலைகளை செப்பனிடுதல். | 9.90 |
| 13. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 6 வரையுள்ள பகுதிகளில் எதிர்வரவுள்ள வடகிழக்கு பருவமழையின் போது மின்மோட்டார்கள் மற்றும் உபகரணங்களை கொண்டு செல்ல ஏதுவாக Tata Ace வாகனத்தினை வாடகை அடிப்படையில் அமர்த்தி பணி செய்தல். | 5.00 |
| 14. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7 முதல் 12 வரையுள்ள பகுதிகளில் எதிர்வரவுள்ள வடகிழக்கு பருவமழையின் போது மின்மோட்டார்கள் மற்றும் உபகரணங்களை கொண்டு செல்ல ஏதுவாக Tata Ace வாகனத்தினை வாடகை அடிப்படையில் அமர்த்தி பணி செய்தல். | 5.00 |

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 15. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13 முதல் 18 வரையுள்ள பகுதிகளில் எதிர்வரவுள்ள வடகிழக்கு பருவமழையின் போது மின்மோட்டார்கள் மற்றும் உபகரணங்களை கொண்டு செல்ல ஏதுவாக Tata Ace வாகனத்தினை வாடகை அடிப்படையில் அமர்த்தி பணி செய்தல். | 5.00 |
| 16. | நகராட்சி பகுதிகளில் தாழ்வான இடங்களில் தேங்கும் மழைநீரினை வெளியேற்ற தேவையான 1.5 HP, 5 HP மின்மோட்டார்கள், Starters மற்றும் பைப் சப்ளை செய்து மழைநீரினை வெளியேற்றும் பணிகள் மேற்கொள்ளுதல். | 9.70 |
| 17. | நகராட்சி பகுதிகளில் தாழ்வான இடங்களில் தேங்கும் மழைநீரினை வெளியேற்ற தேவையான 3 இன்ச், 4 இன்ச், 6 இன்ச் நைலான் குழாய்கள் மற்றும் மின்கேபிள்கள் சப்ளை செய்தல். | 9.80 |
| 18. | நகராட்சி பகுதிகளில் எதிர்வரவுள்ள வடகிழக்கு பருவமழையின் போது தேவையான மணல் மூட்டைகள் தயார் செய்தல், சவுக்கு கொம்புகள் வாங்குதல், மரங்களை அகற்றிட தேவையான மரம் அறுக்கும் இயந்திரம் (Power Saw), நைலான் கயிறு, டார்ச் லைட்கள், குடைகள், அரிவாள், Tree Cutter, Rain Court மற்றும் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களை சப்ளை செய்தல். | 9.90 |

<u>அலுவலக குறிப்பு :–</u>
அ) மன்றம் அனுமதிஅளிக்கலாம்.
ஆ) மேற்படி பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

**<u>பொருள் எண்.37</u>**

திருவேற்காடு நகராட்சியில் பொது நிதி 2025–2026–ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 19.09.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.1 முதல் 18 வரையுள்ள பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளை அலசி (Flusing) சுத்தம் செய்யும் பணி | 5.00 | 1. G.Vijayakumar (L1)<br>2.K.R.Vadivel (L2) | 0.11 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.75 % மதிப்பீட்டை விட அதிகம் |

| வ. எ ண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தாதரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளுதல். | | | |
| 2. | இந்நகராட்சிக்கு புதியதாக 16 எண்ணிக்கையிலான ஆழ்துளை மின்மோட்டார்கள் மற்றும் அதற்கான உதிரிபாங்கள் கொள்முதல் செய்தல். | 10.00 | 1. G.Vijayakumar (L1)<br><br>2.K.R.Vadivel (L2) | 0.05 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.33 % மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு :–</u>

அ) மேற்படி பணிகளில் ஒவ்வொரு பணிகளிலும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதன் எதிரோ குறிப்பிட்டுள்ளபடி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள L1 ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

<u>பொருள் எண்.38</u>

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண்.1 முதல் 18 வரை புதியதாக கோடைக்காலத்தில் குடிநீர் பிரச்சனையினை தவிர்க்கும் பொருட்டு கீழ்க்காணும் விபரப்படி புதியதாக ஆழ்துளை கிணறுகள் அமைக்க நகரமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில், அதன் எதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு தொகைக்கு அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
